SRI LANKA - JAFFNA RECEIVED 30 PERIODICALS DIVISION

**Editor's Note**

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' Uduvil, Chunnakam.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 141 Jaffna, Friday, 19th June, 1981 No. 25

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**Subscription**

Inland: Rs. 35/- per year.

Single issues are available at the Varany Mission Sales Centre, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:* **The Manager,** 'Morning Star', Vaddukoddai.

## DC Election results refute anti-TULF Propaganda

A report issued by Mr. T. Sivasithamparam M. P., Vavuniya has the following statistics to prove the strength of the TULF in the Tamil speaking areas, outside Jaffna.

In *Mannar, Vavuniya* and *Mullaitivu*, the TULF polled *48,332* votes. It denotes that *57.4 per cent* of the people supported the TULF. In these three districts 17 per cent belong to the majority community.

In *Trincomalee*, 30 per cent of the population are Sinhalese. Still, the TULF registered 44,692 votes, representing *51.3 per cent*.

In the *Batticaloa District* where 5 per cent of the people are Sinhalese and where there are two UNP Ministers of State and one UNP member of Parliament and only one TULF member of Parliament and where 24 per cent of the population are Muslims, the TULF registered 74,302 votes representing *59 per cent*.

Even at *Amparai* where there are two UNP District Ministers one UNP Deputy Minister of State and two UNP Members of Parliament and where 31 per cent of the population are Sinhalese, 47 per cent are Muslims, the TULF registered 37,875 votes representing *29.4* per cent.

*Comment*

## Appointment of a Commission

In fact no commission is really necessary to find out what happened and who was responsible.

The acts of arson and of other damage and violence including killings are identifiable and known.

The fact that this was done by a section of the auxiliary (and volunteer) Police that the government sent to Jaffna inorder "to maintain law and order and a peaceful Development Council Poll" is also common ground.

In Parliament this was admitted by Minister Gamini Dissanayake who was himself present at the spot and both he and Anandatissa de Alwis publicly apologised for what a section of the police had done.

The actual identity of the persons responsible for arson and violence is a matter for the CID and the Courts and no Commission can be equipped or competent to do this job of investigation.

*Foreward 15-6-81*

## The Public Library's Baptism of Fire

The last recorded destruction of a library in the sub-continent was towards the end of the 12th century when a Central Asian horde under Khilji annihilated Nalanda University, the famed Buddhist seat of learning in North India, with a three-block library, one nine storeys high. It was then nearly 800 years after that, on the inglorious first of June 1981, the priceless collection of nearly 100,000 books in the Jaffna Public Library was consigned to the flames and a building which was the architectural pride of the North severely damaged. It was in the early 40's that District Court Secretary Chellappah pioneered the movement which resulted over the decades in one of the finest libraries in the land. It is a heart-rending spectacle to those associated with the movement from the beginning. The grimmer is the tragedy because the perpetrators of this dark deed were no other than those who were expected to be custodians of law and order and the moment chosen for their misguided action was the eve of the election of what was believed to be the conciliatory gesture of the District Development Council.

Would that we realized that the loss is not just to the North and to learning among the Tamils? It is a deep dent in the country's intellectual system and loss too to the international community of learning. So don't send to find for whom the bell tolls!

But, did not A. N. Whitehead say that at the terminal period of the Greek and Roman contribution to European civilisation, the fate of that civilisation was saved by the fortunate irruptions of barbarions and the rise of two new religions, Christianity and Islam? Learning did not cease in India with the dismantling of Asia's then best collection of manuscripts at Nalanda and the disbandment of the then world's finest assemblage of scholars. Was it not in subsequent centuries that Indian scholars, writers and scientists make their great contributions in other Indian languages besides Sanskrit, Pali and Tamil, and in languages like English. Or, to take an example from another field, was it not following the Great Fire of 1666, London emerged as a great city of brick, stone and concrete and in some ways the World's Capital City, built on ashes of an erst-while timber-built town? It has often times happened that such deep tragic experiences in the history of a people have proved a turning point in their life where their turned a disaster into a triumph.

It is heartening therefore to note that, on the advice of the Library Committee the City Fathers have decided to immediately re-open in an improvised place, the children's section and the periodical and newspapers rooms. It is fulfilling an obligation cast by the Human Rights Declaration in article 26 and 19. In due course even before the library is re-built let us hope that the Library will resume its role as an agent of Continuing Education. And in the long term it could become the Centre for a system of libraries in the region and partake too of some of the characteristic, of a National Library for the Tamil people of Sri Lanka.

Towards re-designing and re-building the Library in due time, the tax-payer apart, men of means and men with the architect's genius have an obligation. Towards re-stocking the library, there is an obligation on the part of those who have books or could get at books, regardless of geographical frontiers. But the immediate obligation is to citizens of the City. Will every family contribute one book each and those who can, books by the tens and by the hundreds?

The purpose of a general public library is somewhat the same as that of education as conceived today. If education seeks to implant a sense of heritage and impart a vision of the future in the minds of the young and continue through life to stress that sense of heritage and enlarge that vision of things to be, so does a modern public library. The library then is much more than a classified stock of books and audio-visual aids. It has to be in its building design and mode of functioning an educational institution within its walls and without. Well may we say that a City's Public Library is the eye of the city by which the citizens are able to behold the greatness of their heritage and behold the still greater greatness of their future.

**K. Nesiah**

## Spoilt Votes at D C Elections (4-6-81)

| | | | |
|---|---|---|---|
| 1. | Colombo | — | 54,815 |
| 2. | Gampaha | — | 39,432 |
| 3. | Kalutura | — | 15,705 |
| 4. | Galle | — | 15,332 |
| 5. | Badulla | — | 12,688 |
| 6. | Anuradhapura | — | 7,419 |
| 7. | Jaffna | — | 4,333 |
| 8. | Amparai | — | 3,655 |
| 9. | Matale | — | 2,961 |
| 10. | Trincomalee | — | 1,654 |
| 11. | Hambantota | — | 1,392 |
| 12. | Pollanaruwa | — | 1,265 |
| 13. | Batticaloa | — | 1,092 |
| 14. | Vavuniya | — | 527 |
| 15. | Mullaitivu | — | 173 |
| 16. | Mannar | — | 169 |
| 17. | Puttalam | | (figures not available) |

## IN MEMORIAM

In Loving Memory of

My Dear Husband

**David Jeyasingham**

who passed away December 13th. 1980

*Rememberence is a golden chain,*
*Death tries to break but all in vain,*
*To have, to love, and then to part,*
*Is the greatest sorrow of my heart.*
*Time may wipe out many things.*
*But this it wipes out never.*
*The memory of those happy days,*
*When we were all together.*

Sadly missed by wife
**Elizabeth Rose**
Cananda.

## IN MEMORIAM

In Everloving And Treasured Memory

**Thambapillai, D. J.**

Our dearly beloved Father

*Seven months have*
*passed painfully,*
*Without your counsel*
*love and care,*
*We miss you and mourn*
*for you in silence unseen,*
*And dwell in memories*
*of days that have Been,*
*Unknown to the world*
*you stand by our side,*
*And whisper softly*
*death cannont Divide,*

Affectionately remembered and sadly missed by your ever Sorrowing Children.

*Jaffna College*

## Farewell to Mrs. Mithrathasan

On Friday the 12th instant the teachers and students of Jaffna College accorded a farewell to Mrs. Dhanaranjini Mithrathasan who was a teacher of English and Western Music on the eve of her departure to the States with her family to settle down there. Mr. & Mrs. Mithrathasan were taken in procession from the entrance of the College Gate to the Ottley Hall. Speeches were made by the Principal Mr. A. Kadirgamar, the President of the School Council and Students of the Junior School and Secondary School. Mrs. Mithrathasan thanked the students profusely and said that Jaffna College was part and parcel of her life.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

" நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம் "

மலர் 141 ] 19 — 6 — 1981 [ இதழ் 25

## அறிவு வேண்டும்

அமெரிக்க சீர்திருத்தச் சபையின் வெளியீடான திருச்சபைத் தூது என்னும் சஞ்சிகையிலே வேறுபட்ட அல்லது தனி மனித வழிபாட்டியக்கங்களைக் குறித்துச் சமீபத்தில் எழுதிய கலாநிதி வான்டர் வேர்ப் அவர்கள் ஆண்டு 1960 க்குப் பின்னுன காலத்திலே அமெரிக்க சமுதாயம் கணக்கற்ற இவ்வியக்கங்களைக் கண்டுவிட்ட தென்றும், சுமார் 200 இலட்சம் மக்கள் இவைகளில் ஏதோவோர் அளவுக்கான ஈடுபாடுடையவர்களாய்க் காணப்படுகின்றன ரெனவும் கூறுகிருர்கள். இவ்வியக்கங்களிற் சில கீழைத்தேசச் சமயங்களின் அடிப்படையிற் ருேன்றியவை யெனினும் மதோன்மத்த சார்புடையனவாய் மாறி மக்களைத் தம் பாட்டிழுக்கின்றன; விளக்கமற்ற வழிபாட்டிற் சேர்ந்து கொள்ளச் செய்கின்றன. மற்றவை தனி மனித வழிபாட்டியக்கங்களாய்த் தோன்றிப் புத்திமயக்கத்திற் கேதுவான ஆசாரங்கள் மூலமாய் மக்களைத் தம் பக்கம் வைத்துக் கொள்ளுகின்றன. வாழ்க்கை அல்லது விசுவாச உண்மை நிலையை மறுத்து அறிவெல்லைக் கப்பாற்பட்ட ஒரு நிலையை மனிதன் அடைய நாடும் காலமெல்லாம் இப்பேர்ப்பட்ட இயக்கங்கள் அவன் மனதைக் கவர்ந்து கொள்ளும் என்பது மறுக்க முடியாத ஒரு காரியம். சொந்த நலங் கருதிச் செயல் பட்டு வரும் இவ்வியக்கங்கள் திருச்சபையின் வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் இடையூறு விளைவிப்பதன் நிமித்தமாக, இவற்றின் போக்கையும் தன்மையையும் ஆய்ந்தறிவதும் அவ்வறிவுக் கேற்றபடி செயலாற்றுவதும் திருச்சபையின் கடமையென இவர்கள் கொள்கிருர்கள்.

நமது நாட்டைப் பொறுத்த அளவில் இப்பேர்ப்பட்ட இயக்கங்கள் சம்பந்தமான நிலை அந்நாட்டின் நிலையினின்று வேறுபட்டதெனினும், மாற்று மருந்தென அவர்கள் கொள்ளுமொன்று நமக்கும் மிகப் பொருத்தமாகும். நமது நாட்டின் சாதாரண கிறிஸ்தவர்களிடத்தில் கொள்கை அறிவு மிகக் குறைவு. இதைச் சாட்டாகக் கொண்டு "வேதத்தைப் படிப்பிக்கிருேம்," "வேதத்தைச் செவ்வையாகப் படிப்பிக்கிருேம்" என்றெல்லாம் சொல்லிக் கிறிஸ்தவர்கள் விடுகளுக்குட் புகுந்து தம் மனதிற் கண்டபடியெல்லாம் வேதத்திற்குக் கருத்துக் கூறி மக்களைத் தம் பக்கம் இழுத்துக் கொள்ளும் குழுவினர் பலரையும் நாம் காண்கிருேம. தனிப்பட்ட மனிதரின் தேவைக்கேற்றபடி கருத்துக் கூறுவதிலும், இருக்கும் சூழ்நிலைகளுக்கு வேதத்திலிருந்து அதாட்சி "கண்டு பிடிப்பதிலும்," வருங்காலச் சம்பவங்களுக்கு முன்னேடியான உரைகளைத் தேடிப் பிடித்துக் கருத்துக் கொடுப்பதிலும் இவர்கள் வல்லுனர். நம்மவரும் அப்பேர்ப்பட்ட வேத உபயோகத்திற்குத் தம் மனதைப் பறிகொடுத்து "இதுவல்லோ தேவவாக்கு" என்கிருர்கள்,

விசுவாசிகளாகிய கிறிஸ்தவர்களுக்குப் பிரசங்கம் செய்வது கொள்கை சம்பந்தமான போதனையாய் (கற்பித்தலாய்) அமையக் கூடுமாயின் இக்குறைவில் பாதி தீர்ந்ததாகும். பிரசங்கம் என்ருற் பேச்சு வன்மை; பேச்சு வன்மையென்ருற் கை கால் அசைத்து, குனிந்து நிமிர்ந்து, உரத்த சத்தம் போட்டுச் செய்யும் ஓர் அப்பியாசம் என்ற சிந்தனை நம் சபையார் மனதிலும் பிரசங்கிமார் மனதிலும் இருக்கும் வரை, அறிவு வளர்ச்சியில் தாழ்ச்சி இருந்து கொண்டே போகும். வேதப் படிப்பென ஒன்றை இடையிடையே வைத்துக் கொள்ளுகிருேம்; நல்லதே. ஆயினும் எத்தனை பேர் வருகிருர்கள்; ஆர்வமாய்ப் படிக்கிருர்கள்? மிக, மிகச் சிலரே. அந்த நிலையில் ஒவ்வொரு பிரசங்கமும் அறிவைப் புகட்ட ஏதுவாய் இருப்பது நலமன்ருே!

நமது கிறிஸ்தவ சமுதாயத்தினரில் எத்தனை பேர் வாசிக்கிருர்கள் — இறையியல், திருச்சபைச் சரித்திரம், வேத வியாக்கினம் ஆய புத்தகங்களை? அது பழக்கமற்ற ஒரு காரியமாய் விட்டது. தமிழிலே புத்தகங்கள் இல்லையென்ற சாட்டுப் போக்கு இப்போ செல்லுபடியாகாது. ஆதலால் வாசிக்கும் பழக்கத்தை யுண்டுபண்ணுதல் நம் சபைகளின் கடமையாகும். ஒவ்வொரு சபையும் விற்பனைக்காகவோ இரவலாய் வாசிப்பதற்காகவோ புத்தகங்களை வாங்கி வைத்துக் கொள்வது பயன் தரும் எனச் சொல்லவும் வேண்டுமோ? துறைகள் யாவிலும் அறிவு வளர்கிறது; அதைப் பெற்றுக் கொள்ளத் துடிக்கிருேம். பணத்தை வாரியிறைத்தாவது அதற்கான புத்தகங்களை வாங்கிக் கொள்ளுகிருேம். இம்மைக்கும மறுமைக்கும் உரியதான அறிவைப் பெறவோ தயங்கி நிற்கிருேம. அப்படியாளுல் அடிக்கும் காற்ருேடு அசைந்தாடிப் போகிருேம என்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. வாசிக்கும் பழக்கததை நம்மவர் கொண்டிருக்க இவ்வகையான நூலகங்கள் நம் சபைகள் ஒவ்வொன்றிலும் இருப்பதவசியம். இதையறிநது தாமே தத்தமது கொள்கைகளைப் பரபபக் கோடிக் கணக்காய்ச் செலவிட்டுப் புத்தகங்களை வெளியிட்டு இலவசமாய்க் கூடக் கொடுத்து வருகிருர்கள் சிற்சில குழுவினர் தமது விசுவாசததைக காக்கவும வளர்க்கவும் நமது சபையினேர் அறிவைப் பெறும்படி அவர்களுக்கு உதவ நம் சபைகள் அனைத்தும் முன்வர வேண்டும்; அதைத தம் தலையாய கடமையாய் அவை கொள்ள வேண்டும.

## கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாட்சிமை

[ கலாநிதி கனம் ஜேம்ஸ் மேதர் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியது. தமிழாக்கம்: திருமதி இசபேல் இன்பநாதன் ]

மாட்சிமையானது பணதிஞலோ, பெரிய உத்தியோகத்தை வகிப்பதாலோ, அல்லது உலகப் பிரகாரமான லெளகீகப் பொருட்களையோ பணத்தையோ உடையவஞய் இருப்பதாலோ, உயர்ந்த சாதியிற் பிறந்ததாலோ பெறப்படுகிற ஒன்று என்று மனிதருக்குள்ளே ஒரு பிழையான எண்ணமுண்டு. மத்தேயு 8 : 20ல் இயேசு நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்ருர். ஆயினும் அவரைப்போல் ஒரு பெரிய மனிதன் இவ்வுலகத்தில் ஒருக்காலும் பிறந்ததில்லையென நாமறிவோம். இயேசுக் கிறிஸ்துநாதர் பிறப்பதற்கு வெகு ஆண்டுகளுக்கு முன்பே ஏசாயா தீர்க்கதரிசி இவருடைய பிறப்பைப் பற்றித் தீர்க்கதரிசனம் சொன்ஞர். அவர் ஓர் பெரிய சீர்திருத்தவாதியும் மனிதரின் ஜீவியங்களை மாற்றி அமைப்பவருமாயிருப்பார் என்று ஏசாயா 53 : 12-ல் காண்கிருேம், ஏசாயா தீர்க்கதரிசிக்குப் பின் தோன்றிய சகரியா என்று சொல்லப்பட்ட இன்னுமோர் தீர்க்கதரிசியும் இவ்வண்ணமாகவே இயேசுக் கிறிஸ்துநாதரைப் பற்றி முன்னறிவித்தார். சகரியா 9 : 10-ல் 'அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந் தொடங்கி மறு சமுத்திரம் வரைக்கும், நதி தொடங்கிப் பூமியின் எல்லைகள் பரியந்தமும் செல்லும்' என்று கூறப்பட்டிருக்கின்றது.

வேதத்திற் குறிப்பிட்டிருக்கிறபடி இயேசு கிறிஸ்துநாதர் பிறந்தபொழுது அநேக ஆச்சரியமான சம்பவங்கள் நடந்தேறின. அவருடைய பிரபல்யமான சுவிசேஷ வேலையானது மூன்று வருடங்கள் கொண்டதாகவே இருந்தது. பெருந்திரளான ஜனக்கூட்டம் அவருடைய போதனைகளைக் கேட்டது. அவர்கள் மத்தியில் அவர் பல அற்புதங்களைச் செய்தார். ஆனல் குறுகிய காலத்தின்பின் சில மார்க்க தலைவர்கள் இயேசுவிற் கெதிராகத் திட்டம் போட்டு பொருமையினிமித்தம் தங்கள் நிலைகள் என்னவாகுமோ என்ற ஐயப்பாட்டிஞலும பயத்திஞலும் இயேசுவைச் சிலுவையிலறைந்து கொன்ருர்கள். இன்னும சில பெரிய மார்க்கவாதிகள் நடுநிலை வகிப்பவராயிருந்து இயேசுக கிறிஸ்துநாதரின் மாட்சிமையைப் புகழ்ந்தார்கள் என்றும சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டவர்களில் நிக்கொதேமு என்பவர் ஒருவர். இவரைப்பற்றி யோவான் சுவிசேஷம் 3-ம அதிகாரத்தில் வாசிக்கிருேம. ஒரு இரவு அவர் யேசுவிடம் போய, 'ரபி, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிருேம். உண்மையாகவே தேவன் உம்முடனே கூட இருக்கிருர்', என்று கூறினரென்று வாசிக்கிருேம். இன்னும் இப்படிப் பல நடுவர்களைப் பற்றி யோவான 40 : 29, மத்தேயு 8 : 8, 27 : 54, லூக்கா 7 : 6 போன்ற வசனங்களில் வாசித்தறியலாம.

இயேசுக்கிறிஸ்துவின் மாட்சிமையைப் பற்றிச் சிந்திப்பதே நமது நோக்கம். அவரின் மாட்சிமை எவ்வகத்தில் தங்கியிருக்கிறது? என்ன அவரை இவ்வளவு பெரிய மனிதஞக்கிற்று? ஒரு பெரிய சட்டத்தரணி ஆன பவுலே அவரைப் பற்றி 'அவருக்காக நான் எருசலேமில் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன்', என்று கூற அப்போஸ்தலர் நடபடிகள் 21 : 13ல் கூற வைத்தது என்ன? பவுலைப் போல இன்னும் அநேக ஜனங்கள் பல தேசங்களிலிருந்தும், இலங்கையிலும் கூட, கடந்து சென்ற பத்தொன்பது நூற்ருண்டுகளாகத் தங்கள் வாழ்க்கையை இயேசுவிற்கே முற்றிலுமாக அர்ப்பணிக்கவைத்தது இயேசுக்கிறிஸ்துநாதரின் மாட்சிமைதானே.

இப்படியாக நமது சிந்தனைகளைத் தூண்டும் கேள்விகளுக்கு நாங்கள் மூன்று தலைப்புகளுக்குக் கீழ் விடைகள் பகரலாம். I அவரின் மகிமையான போதனைகள். ஒவ்வொரு மனிதனும் உலகத்திலுள்ள சகல மனிதரும் அறிய வேண்டிய போதனைகள். II அவருடைய அதி உத்தமமான வாழ்க்கை. தான் போதித்தவைகளின்படியே வாழ்ந்து காட்டித் தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்குத் தாமே ஒரு நன்முன்மாதிரியாகத் திகழ்ந்தார். III அவரின் சிலுவை மரணம், அவர் அதற்காகத் தம்மை ஆயத்தமாக்கி எதிர்கொண்டமை, மூன்ரும் நாளில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தமை, இவை யாவும் அவரின் மாட்சிமையையும் தனித்துவத்தையும் நமக்கெடுத்துக்காட்டுகின்றன.

### I அவரின் மகத்துவமான போதனைகள் :-

நம்முடைய வேதத்திற் குறிப்பிடப்படுவது யாதெனில் அவர் வேத பாரகரைப்போற் போதியாமல் அதிகாரத்துடன் போதித்தார் என்பது. அவருடைய போதகத்தைக் குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள் என்று மத்தேயு 7 : 28, 13 : 54, லூக்கா 4 : 22, யோவான் 7 : 44 — 46 முதலிய வேத வசனங்கள் காட்டுகின்றன. அவருடைய போதகத்தைக் கேட்க வந்திருந்த ஜனத் திரள் அதிகமாயிருந்ததாலும் அவருக்குக் கிட்ட நெருங்க முடியாதபடியாலும் சிலர் ஒரு திமிர்வாதக்காரனைக் கூரையைப் பிரித்து அவனைக் கீழே இயேசுவாற் குணப்படுத்தப்படும்படிக்கு இறக்கிஞர்கள் என்று மாற்கு 2 : 2 — 4 வசனங்களில் வாசிக்கிருேம். இன்னும் இந்த ஜனக் கூட்டங்களைப் பற்றி மாற்கு 3 : 10; 5 : 24; லூக்கா 5 : 1; 8 : 19 8 : 45; முதலிய வசனங்கள் தெளிவு படுத்துகின்றன.

(தொடரும்)

---

## யாழ்ப்பாணக் கல்லூரி

யாழ்ப்பாணக் கல்லூரி கனிஷ்ட பாடசாலைப் பிரதம வகுப்புகளில் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.

**தகைமை**

1. பயிற்றப்பட்ட அனுபவமுள்ள ஆசிரியர். (ஆண்)
2. கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர் தரப் பரீட்சையில் 4 பாடங்களிற் சித்திபெய்தியவர். (ஆண்)

விண்ணப்பப் பத்திரங்களைக் கல்லூரி அலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் யூலை மாதம் 10 ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

அதிபர்

யாழ்ப்பாணக் கல்லூரி,

வட்டுக்கோட்டை.

2-6-81

## யாழ். மாநகர முதல்வர் கூறுவது

அண்மையில் யாழ். நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஸ்ரீலங்கா பொலிசாரால் கட்டவிழ்த்துவிடப்பட்ட அட்டூழியங்களுக்கு நியாயம் கற்பிப்பதற்காகப் போலும் வேண்டுமென்றே எமது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் நாம் எக்காலத்திலும் பிரயோகியாத வார்த்தைகளை நாம் நாச்சிமார் கோவில் தேர்தல் கூட்டத்தில் பேசியிருப்பதாகக் கட்டுக் கதைகளை அவிழ்த்துவிட்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாண மக்கள் அறிந்தபடி தமிழ்ப் பண்பாடு பேணி அவையடக்கத்துடனேயே எந்தவொரு கூட்டத்திலும் நாம் பேசுவது வழக்கம், பண்பாட்டற்ற வகையில் அவையில் கூறத்தகாத வார்த்தைகளை, அதுவும் குறிப்பாகப் பொதுக் கூட்டங்களில், பேசும் வழக்கம் திராவிட கலாச்சாரத்தில் வளர்ந்த எம்மிடம் கிடையாது. கூட்டங்களில் பேசும்போது எமது தொனி ஏறி இறங்குமே தவிர வார்த்தைகளைப் பிரயோகிக்கும்போது சொற்களை அளந்து பேசுவதையே நான் வழக்கமாகக் கொண்டிருக்கிறேன்.

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலையொட்டி நாச்சிமார் கோவில் வீதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், பொலிசாரை "பொலிஸ் நாய்கள்" என்றோ 'சிங்களப் பொலிஸ் நாய்கள்" என்றோ நாம் கூறியதாகக் கூறப்படும் கூற்றை நாம் மறுக்கிறோம்; வன்மையாகக் கண்டிக்கிறோம். மேலும் அத்தகைய வார்த்தைகள் எமது அகராதியில் இல்லையென்பது தமிழ்ப் பேசும் மக்களுக்குத் தெரியும்.

யாழ். நகர முதல்வர் என்ற வகையில் உத்தியோக ரீதியில் எமக்கும் பொலிசாருக்கும் எப்பொழுதும் நல்லுறவு நிலவி வந்துள்ளது. நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ தினங்களில் கடந்த வருடம் யாழ். மாநகர சபை நடத்திய சுகாதார விழாக் கொண்டாட்டங்களின்போதும் மற்றும் வீதிப்போக்குவரத்து சம்பந்தப்பட்ட ஒழுங்குகளிலும் பொலிசாரின் ஒத்துழைப்பு எமக்குக்கிடைத்தது. அச்சந்தர்ப்பங்களில் நாமும் அந்த ஒத்துழைப்புக்காகப் பொலிசாரைப் பாராட்டத் தவறியதில்லை.

அதுபோன்றே யாழ். மாநகர சபை அளிக்கும் சேவைகளைப் பொறுத்த மட்டிலும் பொலிஸ் பகுதி குறைகாணும் அளவுக்கு எமது கடமைகளில் நாம் தவறியது கிடையாது. அண்மையிலும் கூட தேர்தல் கடமைகளுக்காக இங்கு மேலதிகமாக அனுப்பப்பட்ட பொலிசார் தங்குவதற்கு துரையப்பா விளையாட்டரங்கைக் கொடுத்து உதவியதுடன், அவர்களுக்கு வேண்டிய தண்ணீர் வசதி, மின்சார வசதிகளை மட்டுமல்லாது, தற்காலிக மலகூட வசதிகளையும் நாம் செய்து கொடுத்திருந்தோம்.

உத்தியோக ரீதியில், தனிப்பட்ட முறையிலும் பொலிசாருக்கும் எமக்கும் இடையே எவ்வித மனக்கசப்பும், இல்லாதபொழுது, "பொலிஸ் நாய்கள்" என்றும் "சிங்களப் பொலிஸ் நாய்கள்" என்றும் நாம் கூறியதாகக் கூறப்படுவது வெறும் கட்டுக் கதையே அல்லாது அதில் எதுவித உண்மையும் இல்லையென்பதைச் சம்பந்தப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்கள் அறிவார்கள். யாழ். வன்செயல் சம்பவங்களுக்கு மேற்படி கூட்டத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடே ஆரம்பம் என்பதால், வன்செயல் சம்பவங்களை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்படவுள்ள விசாரணைக் குழுவின் அறிக்கையில் "யாழ் முதல்வரது பேச்சே வன்செயல் சம்பவங்களுக்குக் காரணம்" என்று பின் எழுதப்படுவதற்கு வசதியாக கற்பனை வளமுள்ளயாரோ வேண்டுமென்றே எமது பேச்சைத் திரிக்கத் தலைப்பட்டிருப்பதாகவே எமக்குப் படுகிறது.

எமது பேச்சை நேரில் கேட்ட மக்களும், எம்மை நேரில் அறிந்தவர்களும் இத் துர்ப்பிரச்சாரத்தை நம்பமாட்டார்கள் என்பதில் நம்பிக்கையுடையவனாகவுள்ளேன்.

---

## மனித உரிமைகள் பாதுகாப்பு

அமெரிக்க அரசாங்கத் திணைக்களம் ஒன்று ஜனாதிபதி கார்ட்டரின் ஆட்சிக்காலக் கடைப்பாங்கில் தயாரித்த ஒரு அறிக்கையின் படி மனித உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வது சம்பந்தமாய் உலகின் பல நாடுகளிலும் கொள்கைக் கைதிகள் காணமற் போவது, துன்புறுத்தப்படுவது, கோரச் செயல்களுக்கு ஆட்படுத்தப் படுவதான வன்செயல்கள் 1980 ஆண்டில் மிகக் குறைந்து காணப்பட்டது. இந்தச் செய்தியை R. N. S. என்ற சமய செய்திச் சேவை ஸ்தாபனம் வெளியிட்டுள்ளது. இப்பேர்ப்பட்ட வன் செயல்களைக் குறித்துச் சர்வதேச ஸ்தாபனங்களினால் முன்னர் மிகவும் கண்டிக்கப்பட்டிருந்த நாடுகளிலேயே இந்தக் குறைவு துலாம்பரமாய்க் காண்கிறது.

மனித உரிமைகளைக் காத்துக்கொள்வதில் அக்கறை காட்டாமலிருந்த நாடுகளைக் கார்ட்டர் அரசாங்கம் மிகவும் கண்டித்துக் கொண்டு வந்ததையும், திரும்பத்திரும்ப இக்குற்றச் சாட்டுக்குள்ளான நாடுகளுக்கு இராணுவ உதவியையோ பொருளாதார உதவியையோ கொடுக்க அமெரிக்கா மறுத்ததையும் யாவரும் அறிவர். மேற் கூறிய இந்த அறிக்கை 153 நாடுகளின் நிலவரங்களை ஆராய்ந்து எழுதப்பட்டது.

தென் கொரியாவின் சமுதாய, அரசியல் உரிமைகள் மனிதருக்கு மறுக்கப்பட்ட நிலை 1979 ஆம் ஆண்டின் முதற் பகுதியில் ஓரளவு குறைந்ததெனினும் 1980 ஆண்டில் இது கேடடைந்ததெனக் கூறப்படுகிறது. ஆபிரிக்காவில் பெரும்பான்மையினரான கறுப்பர்களை அடக்கி வைப்பதும், புதினப் பத்திரிகைச் சுயாதீனத்திற்குக் கட்டுப்பாடுகள் போடுவதும் தொடர்ந்து நடைபெறுகின்றன என்பதன் பேரில் ஆபிரிக்காவின் மேல் இந்த அறிக்கை கண்டனம் தெரிவித்துள்ளது.

## மாவட்ட அபிவிருத்திச் சபைகள்

வெவ்வேறான அமைச்சுகளினால் மாவட்டரீதியாக இனிமேல் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் அந்தந்த மா. அ. சபையின் அங்கீகாரத்தைப் பெற்றனவாயிருக்க வேண்டும். மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் வேலைகள், உரிமைகள் பற்றி அமைச்சுகளின் செயலாளர் கொழும்பில் ... நடத்தப்பட்ட ஒரு கூட்டத்தில் பிரதமர் திரு. R. பிரேமதாச அவர்கள் இதை வெளியிட்டார்கள்.

எல்லா அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றியும் கிராமியச் சபைகள், பிரதேசச் சபைகள் ஆக அமைக்கப் படவுள்ள சபைகளின் கருத்தும் முதலிலே அறியப்படவேண்டும். பின்பு இத் திட்டங்கள் மா. அ. சபைகளின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட வேண்டும். மா. அ சபைகளும் கிராமிய, பிரதேசச் சபைகளும் இத்திட்டங்கள் எவ்வாறு முன்னேற்ற மடைகின்றன எனக் கவனித்துக் கொள்ளும்.

தற்போது கிராமச் சபைகளிலும் நகர சபைகளிலும் கடமையாற்றும் அனைவரும் மா. அ. சபைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். தேவைப்பட்ட மேலதிகமான ஊழியர்களை மா. அ. சபைகள் தெரிந்தெடுத்துக் கொள்ளும். ஒவ்வொரு மா. அ. சபைக்கும் வருடாந்தம் அபிவிருத்தி வேலைகளுக்காக 25 இலட்சம் ரூபாய் மத்திய அரசினால் கொடுக்கப்படும். அந்தந்த மா. அ. சபையின் பிரதிநிதிகளான பாராளுமன்ற அங்கத்தவர்கள் கூட்டாக இப்பணம் செலவிடப்படும் வகைக்குப் பொறுப்பாளராயிருப்பார்கள்.

## புதிய சீனாவில் புத்துயிர் பெறும் திருச்சபை

[29-5-81 இதழ்த்தொடர்ச்சி]

ஏராளமான மக்கள் ஞானஸ்நானம் பெற வந்துகொண்டிருந்தனர். எல்லாரையும் உடனடியாகவே ஏற்றுக்கொள்வதில் உண்டாகக்கூடிய கஷ்டங்களின் நிமித்தம் எல்லாருக்கும் ஞானஸ்நானம் கொடுப்பது கடினமாயிருந்தது. திருவிருந்து ஆராதனைகள் நடத்துவதற்கான ஆயத்தங்கள் அப்போதுதான் ஓரளவு முடிவடைந்தன. வழிபாட்டிற்கு வந்துகொண்டிருந்தவர்களில் ஆயிரக்கணக்கானோர் ஞானஸ்நானம் பெறாதவர்கள், அல்லது விசுவாசம் சம்பந்தமான அறிவு போதியளவு இல்லாதவர்கள் என்ற காரணத்தினாற்றான் அந்தளவும் திருவிருந்து கொடுக்க முடியாமற் போயிருந்தது. சில அங்கத்தவர்களின் நாம அட்டவணைகளே பூர்த்தியாக்கவும் படவில்லை.

மேற்கத்திய நாடுகளிலிருந்தே கிறிஸ்தவம் சீனாவுக்கு வந்தது. இதுவும் குடியேற்ற நாட்டாசாட்சி சம்பந்தமாய்க் காணப்பட்டது. எனவே கிறிஸ்தவர்கள் ஒருவகையில் தமது சொந்தக் கலாச்சாரத் தொடர்புகளை இழந்து போயினர். "கிறிஸ்த சபை ஒருவனைச் சேர்க்கும்போது சீனா ஒரு பிரஜையை இழந்து போகிறது" என மக்கள் சொல்லிக் கொள்வது வழக்கம். கிறிஸ்தவர்களும் தேசப் பற்றற்றவராய்ப் போயினர். மூன்றும்சுய வாழ்வியக்கம் இச் சீர்கெட்ட நிலையை மாற்றத் தொடங்கியது. 1920 இன் பத்தாண்டுக் காலப் பகுதியில் இவ்வியக்கத்தின் கொள்கைகள் சபைகளிலே கூறப்பட்டுக் கொண்டு வந்ததாயினும் 1949 ஆண்டிற்குப் பிற்பாடே இவைகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட ஆரம்பமாயின. இப்பொழுதோ கிறிஸ்தவர்களாயும் சீனப் பிரஜைகளாயும் இருப்பதில் எவ்வகையான முரண்பாடும் இல்லையென யாவரும் உணர்ந்து கொள்ளுகிறார்கள்.

நாட்டின் விடுதலையைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் காரர் நமது குருமாரைக் கொலை செய்து, ஆலயங்களை மூடிக் கிறிஸ்தவத்தையே இங்கிருந்து நிர்மூலமாக்குவார்களோ எனப் பயந்திருந்தார்கள். ஆனால் அப்படியொன்றும் நடைபெறவில்லை. வணக்க ஆராதனைகள், வேதப் படிப்புகள், செபக் கூட்டங்கள் முதலியன முன்போல நடந்து கொண்டன. புதிய அங்கத்தவர்களும் சேர்ந்து கொள்ளத் தொடங்கினார்கள். 1958 ஆம் ஆண்டில் எல்லாச் சபைகளும் சேர்ந்து ஐக்கியமான ஆராதனைகளை ஆரம்பித்தார்கள்.

"நால்வர் குழு" ஆட்சிக்கு வந்த பின், கலாச்சாரப் புரட்சி ஆரம்பித்ததும், முந்திய சமய சுயாதீனக் கொள்கைகள் அப்புறப்படுத்தப்பட்டன. திருச்சபை ஆலயங்களும் வேறு சமயக் கட்டடங்களும் சேதப்படுத்தப்பட்டன; இவற்றிற் பல வேறு உபயோகங்களுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. வேதாகமப் பிரதிகளும் பாட்டுப் புத்தகங்களும் ஆயிரக்கணக்காய்த் தீயிடப்பட்டன. வயது சென்ற குருமார் வீடுகளிலேயே தங்கியிருக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர்; இளைய குருமார் கமங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் கடும் வேலை முகாம்களுக்கும் அனுப்பப்பட்டனர். திருச்சபைக்கும் பொதுவாகச் சீனாவுக்குமே இந்தக் கலாச்சாரப் புரட்சி பேரழிவாய் முடிந்தது. 1976 ஆம் ஆண்டில் "நால்வர் குழு" தோற்கடிக்கப்பட்டதுடன் சமய வழிபாட்டுச் சுயாதீனம் திரும்பவும் கொண்டு வரப்பட்டது.

கம்யூனிஸ்ட் கட்சியையும் கிறிஸ்தவத்தையும் பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டது:

"கம்யூனிஸ்ட் கட்சிக்குச் சமய நம்பிக்கை எதுவும் இல்லை; ஆனால் அது சமய சுயாதீனக் கொள்கையைக் கடைப் பிடித்துக் கொள்ளுகிறது. மார்க்க விசுவாசம் அற்றவர்களோடு ஐக்கியமாய்ச் சேர்ந்து நமது சபைகளின் அங்கத்தவர்கள் நாட்டின் நலனுக்காய் உழைக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் அதிகமான வேலைகளில் சிரமத்தோடு உழைக்கிறவர்களாய்க் காணப்பட்டுள்ளனர். எனவே மார்க்க விசுவாசம் அற்றவர்களால் கௌரவத்தோடு நடத்தப்படுகின்றனர். தொழிலாளர் சங்கங்களிலும். அதுபோலவே அரசாங்க ஸ்தாபனங்களிலும், குழுக்களிலுங்கூட, கிறிஸ்தவர்களில் சிலர் பொறுப்பு மிகுந்த பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்தவம் தன்னைத்தானே பிற மக்களிடமிருந்து பிரித்துவைத்துக் கொள்ளும் ஒரு இயக்கமெனவும் ஆதலால் சில சீனரை மற்றவர்களிடமிருந்து பிரித்துப் போடுகிறதெனவும் முன்னொருகால் சிந்திக்கப்பட்டது. இப்பொழுதோ இந்த நிலையெல்லாம் மாறிவிட்டது."

(தொடரும்)

*EDITORIAL*

## Impenetrable Tangles

"*Constancy, far from being a virtue*" *says a modern critic* "*seems often to be the besetting sin of the human race .... the cause of most wars and practically all persecutions*".

Politics and polemics in Sri Lanka have been in recent times characterised by a grim "constancy" which in our view, does not appear to bear an aura of "virtue".

The depths of the quagmire of injustices and insults perpetrated on innocent people in Jaffna cannot be atoned for, by the appointment of another *Commission*.

The ink is not yet dry on the Sansoni Commisson Report which probed into a number of brutal killings of Tamil people and the extensive looting of their property. Many who had lost all their earthly belongings in the August 1977 racial riots thought that redress was pending the release of the Commission Report. To this day they remain a disillusioned lot.

Commissions by themselves cannot solve national problems nor can they alleviate individual suffering. We have seen for ourselves that the political climate in the country has not been the less murky because of the Commissions appointed from time to time.

Some fundamental factors must be borne in mind by the government as it now seeks to unravel another tangled crisis in the political life of the nation.

President Jeyawardene has committed the prestige of his office to the settlement of the Tamil problem and to this end *The Devolution Scheme* should be put to the test in a manner as to prove beyond all reasonable doubt ( to borrow a legal expression ) the credibility of the UNP government ( as reflected in its 1977 Manifesto ).

Time is running out. The situation must now be faced squarely. We must remember that the crisis of 1981 has taken a heavy toll not merely in the gutting of shops and public buildings in Jaffna but in the much larger dimension of making a serious dent in our national image which is not easy to cover up or camouflage.

"Terrorism in the North" should be treated as a subject by itself without using it as a smokescreen to undermine the fundamental rights of the *Tamil people in the North,* even as the alleged "terrorism in the South" ( of which some 300 persons have testified this week before the Police Team officially probing into "incidents in Jaffna") should not be used to make life more difficult for any segment of *people in the South.*

Above all, *Development* in the *Jaffna* District shoud not be treated as in any way different from *Development* in any other district in the island.

Outlining his vision of District Development through DCs, the Prime Minister has said :—

> There are various resources inherent in each district *a culture* in each district, *a music* relevant to a district, *customs* relevant to a district. There is even a difference in the *language* we speak in the different districts.

The Jaffna District answers to this very homely analysis of 'district resources', as much as any other district in the South. We have "an individuality" even as any of the other 23 districts in the country. We are by no means a freak in the Northern part of Sri Lanka.

Yet, it was chillingly apparent that the atmosphere in the Jaffna District was redolent of a gymnasium during the week of the District Council Elections.

"Fact", it is said, "consists in knowing how for we can go too far".

## Engineers for Government Service

A Selection Committee comprising, three Secretaries of Ministries has been appointed, to recruit on open applications engineers of all categories for government service.

The salary attached to the new posts will be according to qualification and experience subject to a maximum of Rs. 7000 a month (inclusive of allowances)

538 engineers have left government service in the past three years. 48 have retired. Those who have left government service include 59 mechanical engineers and 88 electrical engineers. More than half of them are chartered engineers.

## Two important Souvenirs

Two important publications will be released shortly. One is the Special Number of the Jaffna College Miscellany which marks hundred years of its publication. The other is an issue which marks one hundred years of the Jaffna College Alumini Association.

Both these souvenirs are expected to be of reference value in the field of educational research.

## New Vice-Chancellor of the Colombo University

Dr. P. R. Anthonis, the eminent Surgeon of Sri Lanka has been appointed Vice - Chancellor of Colombo University by President J. R. Jeyawardene.

Dr. Anthonis is an old boy of St. Peter's College, Bambalapitiya and has the unique record in the Medical College of coming first in the first class in *all* the Medical College Examinations.

His interests are not confined to Medicine. He has, it is said one of the best collections of books on Ceylon History.

## The CPSL on "Incidents in Jaffna"

*(From a news Report in 'Forward')*

The Political Bureau of the Communist Party in Sri Lanka in a resolution adopted on 9-6-81 has stated that the party is convinced that it is impossible to restore conditions of normality in Jaffna as long as this part of the country is treated by the government "like the occupied territory of an enemy state"

Among its demands are that

a) a public inquiry be held into the composition political character and method of selection of the so-called "volunteers" included in the augmented police force sent to Jaffna.

b) The government gives a full and public account of the activities of the Ministers and supporters that it sent to Jaffna to conduct the UNP's DDC election campaign, including the persons responsible for ordering the arrest of the Leader of the opposition ond other TULF MPs on the morning of the elections.

[Mr. Pieter Keuneman, the General Secretary of the Party visited Jaffna on 5-6-81].

*IN BRIEF*

- *Aptitude Test for Teachers*: All teachers recruited by the Government after 1-10-77 and whose appointments have not been confirmed are required to sit for an examination, shortly.

  This follows the discovery that more than 4000 of the 21,000 teachers recruited from 1977—78 had no minimum qualifications.

- *Fort Church Service*: An Inter - denominational Vesper Service will be held at the Fort Church on Sunday (28-6-81) at the Fort Church, Jaffna.

  St. James Church, Nallur is organising this service on behalf of the Christian Union.

- *The Cost of Specialisation*: According to Dr. N. Karunatillake, Senior Deputy Governor of the Central Bank, a specialised course for three weeks on any subject abroad wil cost the equivalent of Rs. 100,000 in Sri Lankan currency and obtaining a Master's Degree will cost Rs. 400,000. He was referring specially to fields like Banking and Economics.

## District Development Council

**by Professor A. J. Wilson**
*Chairman, Department of Political Science University of New Brunswick, Canada*

As has been stated, if an Executive Committee is dissolved by the President of Sri Lanka, owing to irreconcilable differences between it and the District Minister, *another which commands the confidence* of the District Development Council must be constituted by the District Minister. Nor is there and provision in the District Development Councils Act for District Development Councils to be superseded by the central government in the event of the declaration of a state of emergency as in India and Malasia. A District Development Council can only be dissolved on *stated grounds* as are laid down in Section 63 (1) of the Act, namely incompetence, mismanagement, default and neglect in carrying out its duties, or abuse of power. But dissolution cannot take place merely because the Minister in charge may think that such offences have been committed by a Council. Section 63 (3) of the Act requires the Minister to have the Council investigated by a retired judicial officer. Further more the order for the removal of the Chairman and of all or any of the elected member of the Council must be laid before Parliament. None of these safeguards against a possible abuse of power by the central government is available to the States in the Indian and Malasian Federations.

The Executive Committees of the District Development Councils are therefore in a stronger position to cooperate and bargain with the central government. Sections 39 to 43 of the Act places the burden of planning on a variety of subjects such as agriculture cooperative development, cultural affairs, education, employment, fisheries, health. food, housing, land use and land development, rural development and small and medium scale industries on the Executive Committee and the District Development Council. No donbt the Minister incharge ( in this instance the Prime Minister who is also Minister of Local Government) and the line ministers of the central government have the power to wield the blue pencil. But this is also the case in the Indian Malaysian Federations. And if approval and finances are to be secured from the central government in Sri Lanka, it will be up to the Chairmen and the Executive Committees of District Development Councils to cooperate and bargain with the central government.

*(to be continued)*

*Personal*

Dr. H. A. Jesudason, Director of Health Services has retired from services after 32 years of service He was appointed DHS in 1973.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./100125/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 19th June, 1981.